**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM</u>**

| **STC.No. 19/2021, Private Case PW -1.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **சேகர்** | Caste | : | - |
| Father/ Husband Name | : | **ராசு படையாச்சி** | Calling | : | ராணுவ பணி (ஓய்வு) |
| Village | : | **ஜமீன் பேரையூர்** | Religion | : | - |
| Taluk | : | **ஆலத்தூர்** | Age | : | 52/2024 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 21.08.2024. | | | | | |

Accused are absent u/s 317 C.r.P.C filed and allowed.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** :–

1) நான் ராணுவத்தில் 16 ஆண்டுகள் 3 மாதங்கள் வேலை செய்துள்ளேன். 28.06.1994 ஆம் ஆண்டு பணியில் சேர்ந்தேன். 30.09.2010 ஆம் தேதி விருப்ப ஓய்வு பெற்றேன். நான் விருப்ப ஓய்வு பெற்று சம்பவ சமயத்தில் தமிழ்நாடு மின்சாரவாரியத்தில் செக்யூரிட்டியாக (ஸ்டோர்) பணியாற்றி வந்தேன். 01.02.2020 ஆம் தேதி இரவு 2.36 மணிக்கு போலீசார் என்னை அழைத்து செல்ல வந்தனர். எதற்காக போலீசார் என்னை அழைத்து செல்ல வந்தார்கள் என்றால் பரஞ்ஜோதி என்பவர் கொடுத்த புகாரின் பேரில் என்னை அழைத்து செல்ல வந்தார்கள். பரஞ்ஜோதி என்ன புகார் கொடுத்தார் என்றால் நான், எனது மனைவி, மற்றும் எனது மகள் சேர்ந்து திருமதி.பரஞ்ஜோதியை அடித்ததாக புகார் கொடுத்திருந்தார். புகார்தாரர் பரஞ்ஜோதி எனது ஊரை சேர்ந்தவர் தான். அவர் கணவர் இல்லாமல் வாழ்ந்து வருகிறார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

2) எந்த போலீசார் என்னை அழைத்து செல்ல வந்தார்கள் என்றால் காவல் ஆய்வாளர் கதிரவன், உதவி ஆய்வாளர் மணிகண்டன் ஆகியோர் வந்திருந்தார்கள். மேலும் என்னை ஏற்றி சென்ற காரில் நொச்சிகுளத்தை சேர்ந்த வேறு இரண்டு நபர்கள் இருந்தார்கள். மேற்படி இரண்டு நபர்களும் வேறு வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகள் என்பதை தெரிந்துக் கொண்டேன். என்னுடன் காரில் இருந்த நொச்சிக்குளத்தை சேர்ந்த இரண்டு நபர்களையும் போலீசார் எதற்காக அழைத்து வந்தார்கள் என்றால் ரிமாண்ட் செய்வதற்காக அழைத்து வந்தார்கள். பொதுவாக ஒரு நபரை அழைத்து வந்து விசாரணை செய்யாமல் ரிமாண்ட் செய்யமாட்டார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும்.

3) என்னை போலீசார் அழைத்து வருவதற்கு முன்பாகவே என்னை மூன்று முறை அழைத்து விசாரணை செய்தார்கள். 24.10.2018 ஆம் தேதி நான் இருசக்கர வாகனத்தில் எனது ஊருக்கு வந்து கொண்டிருந்த போது, 10 ஆடுகளை காலில் கட்டி பரஞ்ஜோதி மேய்ச்சலுக்காக ஓட்டிக் கொண்டு வந்தார். அந்த ஆடுகள் வருவதை பார்த்து நான் இருசக்கர வாகனத்தை நான் ஓரமாக நிறுத்திவிட்டேன்.

அதில் ஒரு ஆடு எனது வண்டியில் இடித்து விழுந்து பின் எழுந்து சென்றுவிட்டது. மேற்படி சம்பவ தொடர்பாக பரஞ்ஜோதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதன் பிறகு பரஞ்ஜோதிக்கும் எனக்கும் தகராறு ஏற்பட்டதா என்றால் 06.01.2020 ஆம் தேதி ஆலத்தூர் யூனியன் தலைவர் பதவிக்காக நடந்த தேர்தலுக்காக கூட்டம் நடந்தது அங்கு சென்றிருந்தேன். அப்போது பகல் 12.00 மணியளவில் எனது மனைவி பொங்கல் பண்டிகை வருவதையொட்டி வீட்டில் இருந்த பாத்திரங்களை வெளியே போட்டு சுத்தம் செய்துக் கொண்டிருந்த போது, பரஞ்ஜோதி எனது மனைவியை பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டியுள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக எனது மனைவி எனக்கு போன் மூலமாகவோ, அல்லது நான் வீட்டிற்கு வந்த போது நேரடியாகவோ சொன்னாரா என்றால் சொல்லவில்லை. மேற்படி சம்பவம் நடக்காததால் தான் எனது மனைவி அதைபற்றி சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வேலைக்கு செல்லும் நேரத்தில் சண்டை பற்றி சொல்ல வேண்டாம் என்பதால் எனது மனைவி மேற்படி சம்பவத்தை பற்றி என்னிடம் தெரிவிக்கவில்லை.

4) நான் ஆலத்தூரில் இருந்த போது, எனது நண்பர் நீலமேகம் என்பவரும் என்னுடன் இருந்தார். பின்னர் கூட்டம் முடிந்த பிறகு நீலமேகம் என்னை அரியலூரில் விட்டுவிட்டு சென்றார். நான் வீட்டிற்கு வந்து குளித்துவிட்டு 3 மணியளவில் ட்யூட்டிக்கு கிளம்பிவிட்டேன். 3.15 மணியளவில் பரஞ்ஜோதி மீண்டும் எனது வீட்டிற்கு வந்து எனது மனைவியை அடித்து அசிங்கமாக பேசி அறிவாள்மனையால் கொலை செய்ய முற்பட்டுள்ளார். எனது மனைவி சத்தம் போட்டதால் அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் வருவதை பார்த்தவுடன் பரஞ்ஜோதி சென்றுவிட்டார். மறுநாள் நான் ட்யூட்டி முடித்துவிட்டு வந்தவுடன் எனது மனைவி மேற்படி விபரங்களை என்னிடம் தெரிவித்தார்.

5) மேற்படி சம்பவம் தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் மறுநாள் 07.01.2020 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு குன்னம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் மணிகண்டன் என்பவரிடம் புகார் கொடுத்துவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். 09.01.2020 ஆம் தேதி காலை எனக்கு போன் வந்தது. அதில் காவல் ஆய்வாளர் பேசுவதாகவும் விசாரணைக்கு வர வேண்டும் என்று சொன்னதின் பேரில் காலை 10.00 மணிக்கு நான் காவல் நிலையம் சென்றேன். எந்த நம்பரில் இருந்து எனக்கு போன் வந்தது என்றால் எந்த நம்பர் என்று தெரியாது. நான் காவல் நிலையம் சென்ற பிறகு மீண்டும் அதே நம்பருக்கு நான் போன் செய்த போது காவல் ஆய்வாளர் தான் பெரம்பலூர் நீதிமன்றத்தில் இருப்பதாகவும் நான் கூப்பிடும் போது வா என்று சொன்னதன் பேரில் நான் மீண்டும் வீட்டிற்கு வந்துவிட்டேன். காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் பாலசுந்தர் என்னிடம் நான், எனது மனைவி, மகள் மாலா ஆகியோர் சேர்ந்து பரஞ்ஜோதியை அடித்ததாக புகார் கொடுத்துள்ளார் என்றும், அது தொடர்பாக மாலை விசாரணைக்காக வர வேண்டும் என்றும் சொன்னாரா என்றால் என்னிடம் அவ்வாறு சொல்லவில்லை.

6) மறுநாள் போலீசார் சம்பவ இடம் வந்து லட்சுமி, வெள்ளையம்மாள் ஆகியோர்களை விசாரித்ததில் பரஞ்ஜோதியை நாங்கள் அடித்தது உண்மையென தெரியவந்ததால் அதன் பேரில் தான் எங்களை விசாரணை

செய்ய வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் பரஞ்ஜோதியின் பேரில் கொடுத்த புகாரின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் நான் கொடுத்த புகாரை MF செய்துவிட்டதாக எனக்கு தகவல் வந்தது. மேலும் போலீசார் ஊருக்கு வந்து அங்கிருந்த நபர்களை விசாரணை செய்த போது விசாரணையில் பரஞ்ஜோதி எங்கள் வீட்டிற்கு வரவில்லை என்பதும், நான் சொல்வது போல் எந்த சம்பவம் நடைபெறவில்லை என்பது தெரியவந்ததின் பேரில் தான் எனது வழக்கு MF செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

7) நான் எனது வழக்கு MF செய்யப்பட்டது தொடர்பாக மேலதிகாரிகளிடம் நான் மனு எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. 18.01.2020 ஆம் தேதி என்னிடம் காவல் ஆய்வாளர் ரூ.25000/- பணம் கேட்டது தொடர்பாக நான் ராணுவத்தில் பணியாற்றியதால் லஞ்சஒழிப்பு அதிகாரிகளிடம் தகவல் கொடுத்திருக்க வேண்டுமென்றாலும், நான் சொல்வது போல் அவ்வாறு ஒரு சம்பவம் நடைபெறாததால் தான் நான் லஞ்ச ஒழிப்பு அதிகாரிகளிடம் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் நேர்மையான அதிகாரியின் மீது ஒரு பொய்யான புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 18.01.2020 ஆம் தேதி உதவி ஆய்வாளர் மணிகண்டன் எனக்கு போன் செய்தார். மேற்படி உதவி ஆய்வாளர் எந்த நம்பரில் இருந்து போன் செய்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

8) என்னை போலீசார் ஜீப்பில் அழைத்து வந்த போது, எனக்கு போலீசார் சாப்பாடு வாங்கி கொடுத்தார்கள் என்றும் நான் தான் சாப்பிடவில்லை என்றால் சரியல்ல. என்னை காவல் நிலையத்தில் வைத்திருந்த போது எனது உறவினர்கள் என்னை பார்க்க வந்தார்களா என்றால் வந்தார்கள். ஆனால் போலீசார் உள்ளே விடவில்லை. பொதுவாக போலீசார் மருத்துவ பரிசோதனை முடித்த பின்னர் தான் நீதிபதியிடம் ரிமாண்ட் செய்ய அழைத்து செல்வார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதே போல் மருத்துவமனையில் மருத்துவர் பரிசோதனையின் போது போலீசார் என்னை அடித்த விபரத்தை மருத்துவரிடம் சொன்னேன். ஆனால் மருத்துவர் அறிக்கையில் காயங்கள் எதுவும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9) என்னை ரிமாண்ட் செய்ய நீதிபதியிடம் அழைத்து சென்ற போது, என்னை தரையில் உட்காரவைத்த விபரத்தையும், அடித்த விபரத்தையும், சாப்பாடு வாங்கி தரவில்லை என்ற விபரத்தையும் நான் நீதிபதியிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். நான் அவ்வாறு சொல்லியிருந்தால் நீதிபதி அதை பதிவு செய்திருப்பார் நான் அவ்வாறு சொல்லாததால் தான் நீதிபதி அதைபற்றிய குறிப்புகள் எதையும் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னை கைது செய்தது தவறு என்று நான் யார் யாருக்கு மனு செய்துள்ளேன் என்றால் தலைமை செயலகம், DGP அலுவலகம், மனித உரிமை ஆணையம், DIG, IG, DSP, SP, Inspector ஆகியோருக்கு மனு கொடுத்துள்ளேன். மேற்படி மனுவின் மீது மேற்படி நபர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் யாரும் நடவடிக்கை எடுக்காததால் தான் நான் இந்த நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன்.

DMKumaran

10) நான் கொடுத்த மனு பொய் என்பதால் மேற்படி மனுக்கள் முடிக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. மேற்படி மனுவானது மனித உரிமை ஆணையத்தில் விசாரணைக்கு பின் முடிக்கப்பட்டுவிட்டது என்றால் நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ததால் மேற்படி மனு முடிக்கப்பட்டுவிட்டது. மனித உரிமை ஆணையத்தில் கொடுத்த புகாரை மறைத்து தான் இந்நீதிமன்றத்தில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் இல்லை. நான் மேற்படி விபரங்களை சொல்லியும், ஆவணங்களை தாக்கல் செய்தும் தான் இந்த வழக்கை இந்நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேன். காவல் துறையினர் நான் கொடுத்த புகாரின் பேரிலும், பரஞ்ஜோதி கொடுத்த புகாரின் பேரிலும் நடவடிக்கை எடுத்தார்கள் என்று சொன்னால் நான் மேற்படி இடங்களில் எல்லாம் மனு கொடுத்த பிறகு தான் போலீசார் எனது புகாரின் பேரில் நடவடிக்கை எடுத்தார்கள். நான் சொல்வது பொய் என்றாலும் இரண்டு முதல்தகவல் அறிக்கையும் ஒரே நேரத்தில் தான் பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

11) பொதுவாக சி.சி.டி.வி பதிவுகள் ஒரு மாதம் வரைதான் இருக்கும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். காவல் நிலையத்தில் கண்காணிப்பு கேமராக்கள் இருக்கும் விபரம் தெரியுமா என்றால் தெரியாது. உச்சநீதிமன்ற அறிவிப்பின்படி அனைத்து காவல் நிலையங்களிலும் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டிருக்கும் என்றாலும் என்னை போலீசார் தரையில் உட்கார வைத்தது, சாப்பாடு கொடுக்க மறுத்தது, அடித்தது பணம் கேட்டது போன்ற விபரங்கள் குன்னம் காவல் நிலையத்தில் இருந்த கண்காணிப்பு கேமராவில் பதிவாகி இருக்கும் என்றாலும், மேற்படி சம்பவம் உண்மையாக இருக்கும்பட்சத்தில் மேற்படி காவல் நிலையத்தில் கண்காணிப்பு கேமராவில் பதிவான பதிவுகளை கேட்டு நான் மனு தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் நான் சொல்வது போல் ஒரு சம்பவமே நடைபெறாததால் தான் நான் கண்காணிப்பு கேமராவின் பதிவுகளை கேட்டு மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

12) எனது பெயரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டால் பென்சன் கட்டாகிவிடும் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றாலும், காவல் ஆய்வாளர் சொல்லி தான் மேற்படி விபரம் தெரியும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் நடக்காத சம்பவத்திற்கு மறுநாள் வந்து புகார் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கொடுத்த புகார் அனைத்தும் பொய் என்று சொன்னாலும் காவல் ஆய்வாளர் யார் என்று எனக்கு தெரியாது என்றாலும் நான் அவரை பார்த்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. பொதுவாக போலீசார் விசாரணையின் போது யாரையும் அடிக்கமாட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்காக குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC Kunnam